

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே செல்லப் பாண்டியன் வரவேற்புரையிலும், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையிலும் ராயல் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். உடன் எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, சு.சண்முகம், ஆ.செந்தில், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மற்றும் ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புக்கள் உள்ளிட்ட 5000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி நெய்வேலி சட்ட மன்றத் தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு , பண்ருட்டி தெற்கு, பண்ருட்டி வடக்கு, நெய்வேலி நகரம், ஆகிய பகுதியில் ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்துகொண்டு அவர்கள் சிரப்புரையாற்றினார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா, ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் குணசேகரன், சந்தோஷ், நகர கழகச் செயலாளர் குரு நாதன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவர்

# அலமேலு ஆறுமுகம் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் இன்று நடக்கிறது!

கள்ளக்குறிச்சி, செப். 6 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் வாணியந்தல் ஆறுமுகம், கள்ளக்குறிச்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர் அலமேலு ஆறுமுகம் மகள் சந்தியாவுக்கும், அகரக் கோட்டாலத்தை சேர்ந்த முருகேசன்தனம் மகன் பாலாஜி (கிராம நிர்வாக அலுவலர்) க்கும் இன்று (06.09.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் 9.30 மணியளவில் கள்ளக்குறிச்சி அருகில் உள்ள மாடூர் கிராம எல்லை சேலம்சென்னை தேசிய நெடுஞ்சாலையில்



அமைந்துள்ள ஏ.என்.பி திருமண மஹாலில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சரும், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் திருமண விழாவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாநில மருத்துவரணி துணைத்தலைவர் எ.வ.வே. கம்பன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாநில மகளிரணி துணை செயலாளர் ஆ.அங்கையற் கண்ணி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள்,மூத்த முன்னோடிகள், அரசியல் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்,திருமண விழாவிற்கு வரும் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை கேரளா செண்டை மேளம் முழங்க மாவட்ட துணை செயலாளர் வாணியந்தல் ஆறுமுகம் தலைமையில் மிக சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கிறார்.

### திருவாரூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் பங்கேற்று பயனடைவீர்!

# மண்டல அளவிலான மாற்றுத்திறனாளிகள் சிறப்பு வேலைவாய்ப்பு!

## பூண்டி கே.கலைவாணன் வேண்டுகோள்!

திருவாரூர்,செப். 6 -

மண்டல அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலை வாய்ப்பு முகாமில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பங்கேற்று பலனடைய மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறி இருப்பதாவது, தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி, மண்டல அளவிலான மாற்றுத்திறனாளிகள் சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் இன்று (06.09.2024 - வெள்ளிக்கிழமை) திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள கலையரங்கம் திருமண மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை 4.00 மணி வரை நடைபெற இருக்கிறது.

எனவே நமது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள



18 வயதிற்கு மேற்பட்ட, 8, 10,+2,ஐடிஐ, டிப்ளமோ, நர்சிங், ஏதாவது பட்டப்படிப்பு ,பொறியியல் படிப்பு ஆகிய கல்வித்தகுதியுடைய மாற்றுத் திறனாளிகள் தங்களது கல்வி சான்றுகள், ஆதார் அட்டை,சுயவிபர குறிப்பு,தேசிய அடையாள அட்டை மற்றும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை[UDID] ஆகியவற்றுடன் முகாமில் கலந்து பலனடைய கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டல் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் சேலத்தில் உள்ள செயின்ட் பால் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். உடன் சேலம மாநகராட்சி மேயர். ஆ ராமச்சந்திரன் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சங்கீதா நீதிவர்மன், கிரிஜா குமரேசன், பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர்க. சுந்தர் எம்.எல்.ஏ.சிறப்புரை! க.செல்வம் எம்.பி.பங்கேற்பு!

# மதுராந்தகம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் பொன்.சிவக்குமார் அறிக்கை!

காஞ்சிபுரம்,செப். 6 -

காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் 11.9.2024 புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு பெருவெளி கூட் ரோட்டி.ல் அமைந்துள்ள டிபி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் நான் (ஒன்றிய செயலாளர் பொன். சிவகுமார்) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

ஒன்றிய அவைத்தலைவர் கே.சசிகுமார் தலைமை வகிக்கிறார்.

ஆர்.வெங்கடேசன், பொன்.சக்கரபாணி,ஏ.ஜி. ஆர்.சுமித்ராதேவி,து. குமார், ரோக்சகாயராஜ்,வி. தனபால்,பத்மாசெல்வராஜ்,மு.ச.டில்லிபாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில்லமாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் க.செல்வம் எம்பி., எண்டத்தூர் வி. ஸ்ரீதர், செம்பருத்தி துர்கேஷ், பி. ராஜாராமகிருஷ்ணன், ஜி.எஸ்.தினகரன், சசிரேகா, ஜெ.ஜெய்சங்கர், வி.தணிகைஅரசு,ஜெ.அரசு, பி. இளங்கோவன், எஸ். ஸ்டீபன் சவரி, இ.சங்கர்,வி. ஜெயந்திவாசுதேவன்,ஆறுமுகம், இம்பாரதி, பி.ராஜன் பாபு, டாக்டர் எஸ்.சிவா, சுஜாதா ஜெய்சங்கர், பிரியா சக்கரபாணி, லதா மனோகரன், செல்லம்மாள் ஜெயராமன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஜி.டி.எம்.தெய்வசிகாமணி நன்றி கூறுகிறார்.

### ஏ.ஆர்.ராஜா வரவேற்புரை!

# குத்தாலம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மயிலாடுதுறை, செப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கோமல் ஸ்ரீமதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக் கழக பொருளாளர் ஆர்.தங்கராசு தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர். ராஜா வரவேற்றார். ஒன்றிய குழு துணைத்தலைவர் இரா.முருகப்பா, ஒன்றியக் கழக நிர்வாகிகள் ப. முருகன், பி. வரதராஜன், லெட்சுமிகாசிராஜன், ஆர்.ராஜசேகர், எம்.என். இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ். செல்வமணி, ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் வி.சௌமியன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயாராஜேந்திரன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் என்.மதியழகன், ஜி.ராகவன், ஏ.மில்லர், ஆர்.ராகுல்வர்மா, சிவஞானசுந்தரி, எஸ்.என்.ரவி, டி.சசிக்கலா, தகவல் தொழில் நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் எம்.பி.சரவணன், ரவிந்தர், ஒன்றிய இளைஞர் அணி கார்த்திக், ஒன்றிய குழு உறுப்பினர் திவ்யா சரண்ராஜ் மாவட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகி கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.


கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி தமிழகத்தில் 40க்கு 40 வெற்றிக் கனி பறித்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, மயிலாடுதுறை நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆர்.சுதா வெற்றிக்கு உழைத்திட்ட குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், மாவட்டக் கழகம் அறிவித்தது போல் குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த, தமிழ் வெல்லும் என்ற வார்த்தையோடு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து குத்தாலம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து கொள்வது என்றும், பல்வேறு நல திட்டங்களை அறிவித்து செல்படுத்தி

சிறப்பாக ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்ட மன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் பூம்புகார் சட்ட மன்ற தொகுதியில் அதிக வாக்குகளை பெற்று தர குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்ட மன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்றும், குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் க.முருகையன்

### செப்டம்பர் 6 (1997)



இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**